# FORM-3
## MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 டிசம்பர் திங்கள் 06.12.2010–ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை**
திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

சிறப்பு சாலைத் திட்டம் 2010–2011–ன்கீழ், கீழ் கண்ட பணிகளுக்கு இரண்டாவது முறையாக 29–11–2010–ம் நாள் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | வேலையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பணியின் மதிப்பு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிப்பம் – II<br>சன்னதி தெரு முதல் எம்.ஜி.ஆர். சாலை வரை சிமெண்ட் தளம் அமைத்தல், வார்டு எண்.11 மற்றும் 12 – துறைமுகத்தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், வார்டு எண்.13 மற்றும் 14 –துறைமுகத்தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், மாதாகாலனி தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், சீம்பிளிவிளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், தும்பக்காட்டுவிளை தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், ஆண்டிப்பிள்ளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல்., மாலவிளைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், ஆசாரிமார் மேலத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல், ஆசாத்நகர் முதல் பள்ளிச் சாலை வரை சிமெண்ட் தளம் அமைத்தல், வார்டு எண். 8 மற்றும் 9 –ல் மரமடி தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல், | 98.04 |

மேற்கண்ட பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களின் பெயர் மற்றும் முகவரி | சிப்பம் எண். (Package No.) | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு,J. ஜெப ஜோஸ்,<br>29/55B, ஒற்றுவிளை,<br>திக்குறிச்சி அஞ்சல்,<br>கன்னியாகுமரி மாவட்டம் | II | ரூ. 9804221.34 | மதிப்பீட்டைவிட 4.49% கூடுதல் (ரூ.10244630. 50 ) |
| 2 | திரு.P. தஙகசுவாமி,<br>64H, இலந்தையடி தட்டு,<br>புத்தன்துறை அஞ்சல்,<br>கன்னியாகுமரி மாவட்டம். | | | மதிப்பீட்டைவிட 4.89% கூடுதல் (ரூ.10283398. 45 ) |

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.25910/2010/இ3, நாள் 03–11–2010–ன்படி கலந்து கொண்ட இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள அதாவது மதிப்பீட்டைவிட 4.49% கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் திரு,J. ஜெப ஜோஸ் என்பவரின் விலை விகிதத்தை குறைத்து வழஙக கேட்டு மேற்படி ஒப்பந்ததாரருக்கு 02.12.2010 அன்று (Negotiation letter)

வழஙகப்பட்டது. 02.12.2010 அன்று மேற்படி ஒப்பந்ததாரர் திரு,J. ஜெப ஜோஸ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் கட்டுமானப் பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியன அரசு நிர்ணயித்த விலை விகிதத்தை விட பொதுச்சந்தையில் கூடுதலாக உள்ளதாகவும், தான் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டை விட 4.49% கூடுதலாக உள்ள விலை விகிதத்தை இதற்கு மேல் குறைக்க இயலாதெனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு ( 2.7.2 )—ன்படி மேற்படி ஒப்பந்ததாரரால் விலைக்குறைப்பு சம்மதக் கடிதத்தில் (Negotiation letter) தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தினை ஏற்று அவர் ஒப்பந்தப்புள்ளியில் ஏற்கனவே கோரியுள்ள மதிப்பீட்டை விட 4.49% கூடுதலாக உள்ள விலை விகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வுழஙகவும், இதில் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

சிறப்பு சாலைத் திட்டம் 2010—2011—ல் உள்ள அனைத்து பணிகளும் சிமெண்ட் சாலை என்பதாலும், நகராட்சி மதிப்பீட்டில் உள்ள கட்டுமானப் பொருட்களின் விலையை விட பொதுச்சந்தையில் விலை கூடுதலாக உள்ளதாலும், தற்போது மிகவும் பழுதான நிலையிலுள்ள சாலைகளை பொது நலன் கருதி சிமெண்ட் சாலையாக அமைக்க வேண்டியுள்ளதாலும் இத்திட்டம் அரசு மானியத்துடன் உள்ள சிறப்பு திட்டம் என்பதாலும், நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு (2.7.2)—ன்படி சிப்பம் II—க்கு குறைந்த விலை விகிதத்தில் கோரியுள்ள மேற்படி ஒப்பந்ததாரர் திரு,J. ஜெப ஜோஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியான மதிப்பீட்டைவிட 4.49% கூடுதலான விலைவிகிதத்தை ஏற்று பணி உத்தரவு வழஙகவும், மேலும் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாகும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.4936/2010/இ1)

**தீர்மானம் எண். 1534 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 2</u>

இந்நகராட்சியில் செயல்படுத்தப்படும் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (SJSRY) வரப்பெற்ற நிதியில் டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள Tea கடையினை 01.12.2010 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலக்கேள்வி கேட்டுள்ளனர்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | நகராட்சி நிர்ணயம் செய்த தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. செல்வராஜ்,<br>புதுத்தெரு, குளச்சல். | 1910 | 12,550/— | ரூ. 25000/—<br>D.D.No.231621<br>நாள் 19.10.2010. |
| 2 | திரு. எஸ்.குமரப்ப ராஜா<br>23/90.பி, இலந்தையடி,<br>புத்தன்துறை. | | 12,500/— | ரூ. 25000/—<br>D.D.No.847444<br>நாள் 29.11 .2010. |

மேற்படி பொது ஏலக்கேள்வி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1) இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1439 நாள் 20.08.2010—ல் மேற்படி கடைக்கு மாத அடிப்படை வாடகை மதிப்பு ரூ. 1910/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
2) வரப்பெற்ற 12 ஏலதாரர்களில் திரு.செல்வராஜ், குளச்சல் என்பவர் ரூ. 12,550/— ஐ மேற்படி Tea கடைக்கு மாத வாடகையாக ஏலக் கேள்வியாக கேட்டுள்ளார்.
3) மேற்படி கட்டிடத்திற்கு நகராட்சி நிர்ணயம் செய்துள்ள தொகையை விட கூடுதலாக மாத வாடகையாக ரூ. 12,550/—க்கு ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.செல்வராஜ், புதுத்தெரு, குளச்சல் என்பவரின் ஏலக் கேள்வியை பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.5731/2003/இ1)

**தீர்மானம் எண். 1535 — அதிகபட்ச கேள்வி கேட்டுள்ள திரு.செல்வராஜ்,, புதுத்தெரு, குளச்சல் என்பவரின் லேலக் கேள்வியை ஏற்றுக் கொண்டு உத்தரவு வழஙகிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 3</u>

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.307/2010/அ3 நாள் 16.11.2010–ல் இந்நகராட்சிக்கு 2010–11 ஆம் ஆண்டிற்கான நகராட்சியின் பங்குத்தொகை ரூ. 25,000/– ம் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2010–11 –ம் ஆண்டிற்கு ரூ. 25,000/– (ரூபாய் இருபத்தைந்து ஆயிரம் மட்டும்) இந்நகராட்சியின் பங்குத் தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.அ1/1542/2001)

**தீர்மானம் எண். 1536 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 4</u>

இந்நகராட்சி கணினி அறையில் அமைந்திருக்கும் UPS 5 KV –க்கான வருடாந்திர பராமரிப்பு கட்டணம் (AMC) 02.11.2010 உடன் முடிவடைந்து விட்டதால் 03.11.2010 முதல் 02.11.2011 வரையிலான AMC கட்டணம் ரூ. 8,273/– மேற்படி UPS Supply செய்த Numeric Power System நிறுவனத்தாருக்கு வழஙக மன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1537 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 5</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண். CMA/ITC/5708/2010 நாள் 24.10.2010 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.6271/2010/பி2 நாள் 15.11.2010–ன்படி குளச்சல் நகராட்சியின் வார்டு எல்லைகள் காண்பிக்கும் நகர வரைபடம் இணையதளத்தில் போடுவதற்கு வேண்டி தேவைப்படுவதாகவும், அதனை Auto Cad –ல் தயார் செய்து உடனடியாக C.D.யாக அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குளச்சல் நகராட்சியின் வார்டு எல்லைகள் காண்பிக்கும் நகர வரைபடம் தனியார் கணினி நிறுவனத்தின் மூலம் Auto Cad –ல் C.D.யாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அலுவலகத்திற்கு நேரிலும், இ.மெயில் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 1160/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5944/2003/TPI)

**தீர்மானம் எண். 1538 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

இந்நகராட்சியில் 2010–11 ஆம் ஆண்டிற்கு குடிநீர் வினியோகம் செய்யும் மின் மோட்டார்கள், குடிநீர் குழாய்கள், பேனல் போர்டு ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு 24.11.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவை பின்வருமாறு :

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி. சந்திரசேகர் | 1.59% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ.480415.80 ) |
| 2. | திரு. பி.தஙகமணி | 1.29% மதிப்பீட்டை விட கூடுதல். (ரூ. 494515. 00) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.59% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : (1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1476 நாள் 30.09.2010–ன்படி ஏற்கனவே மன்றம் ஒப்புதல் வழஙகி உள்ளது.

(2) மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(3) மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட 1.59% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(ந.க.எண்.5505/2010/இ1)

**தீர்மானம் எண். 1539 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 7</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 21–வது வார்டு பண்டகசாலைபுரம் ஆசாத் தெருவில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 லட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2010–11–ன்கீழ் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.1565/2010/இ3 நாள் 01.06.2010–ன்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 23.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.சி.பிரின்ஸ், ஒப்பந்ததாரருக்கு 01.07.2010–ல் வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பொதுமக்களின் வேண்டுகோளின்படியும், நகர்மன்ற உறுப்பினர் மனுவின்படியும் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைக்கும் பணியை சிறிது துாரம் நீட்டித்து தரும்படி கேட்டுள்ளதின்படியும், நகர்மன்றத் தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர், பொறியாளருடன் இடம் பார்வையிடப்பட்டு, மேற்படி பணியை பொதுமக்கள் வேண்டுகோளின்படி நீட்டித்துத் தர அறிவுறுத்தியதின் அடிப்படையில் பணி செய்வதற்கு மறு மதிப்பீடு ரூ. 3.80 லட்சத்துக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11 நிதியில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்ட தொகை ரூ.3.00 லட்சம் போக மீதித் தொகை ரூ. 80,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.1066/2010/E1)

**தீர்மானம் எண். 1540 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 டிசம்பர் திங்கள் 23.12.2010–ம் நாள் வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை**
திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

**பொருள் எண் : 1**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நேர்முகக் கடிதம் எண்.50224/10/எப்2 நாள் 23.11.2010–ல் 2008–09 மற்றும் 2009–10–ம் ஆண்டுகளின் ஆண்டுக்கணக்குகள் உரிய கால கெடுவிற்குள் தயார் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பாமல் உள்ளதற்கு அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் உதவியாளர்/ கணக்கர் பணியிடம் இல்லாத காரணத்தினால் ஆண்டுக் கணக்குகள் தயார் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. முந்தைய ஆண்டுகளில் ஆண்டு கணக்குகள் நகராட்சி கண்சல்டன்ட் மூலம் தயார் செய்யப்பட்டு தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அதன்படி இந்நகராட்சியின் 2008–09 மற்றும் 2009–10–ம் ஆண்டுகளுக்கான ஆண்டு கணக்குகள் திரு.வி.சீனிவாசன்,எம்..காம்.,சி..ஏ.,கன்சல்டன்ட், கோவில்பட்டி மூலம் தயார் செய்து தணிக்கைத் துறைக்கு அனுப்பவும், அதற்கான கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000/– வீதம் ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) திரு.வி.சீனிவாசன், கன்சல்டன்ட், கோவில்பட்டி என்பவருக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1519 நாள் 29.11.2010–ல் 2007–08–ம் ஆண்டு கணக்குகள் முடித்த வகைக்கு ரூ. 20,000/– (ரூபாய் இருபதினாயிரம் மட்டும்) வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
2) அதன்படி 2008–09 மற்றும் 2009–10–ம் ஆண்டுகளுக்கான கணக்குகள் முடித்து தணிக்கை துறைக்கு அனுப்பி வைக்க ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000/– வீதம் ரூ.40,000/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6529/2010/சி1)

**தீர்மானம் எண். 1541 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இவ்வலுவலக பணத்தை வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்த செல்வி.கே.சாந்தி, வருவாய் உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) என்பவர் நகராட்சி மூலம் நிர்வாக ரீதியாக வழஙகப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண்.1572/சி1/2009 நாள் 22.07.2010 மீது நடவடிக்கை எடுப்பதை தடை செய்யக் கோரி சென்னை, உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் தாக்கல் செய்த வழக்கு W.P.(MD) எண்.12482/2010 நாள் 05.10.2010–ல் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் மீது சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையில் W.A.எண். 887/2010–ன்படி அப்பீல் செய்துள்ளார். மேற்படி வழக்கின் மீது திரு.கே.பி. கிருஷ்ணதாஸ், அட்வகேட், 3,சட்டவளாகம், உயர்நீதிமன்ற கட்டிடம், மதுரை என்பவரை நகராட்சியின் சார்பாக வாதாட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மேற்படி வழக்கினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதால் திரு.கே.பி. கிருஷ்ணதாஸ், அட்வகேட், மதுரை என்பவரை நகராட்சியின் சார்பாக வாதாட மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1542 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

இந்நகராட்சியின் முன்னாள் மின்பணியாளர் நிலை–II ஆக பணிபுரிந்து பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு.வி.கணேசன் என்பவர் இந்நகராட்சியில் பணிபுரிந்த காலத்தை ஓய்வூதியத்துடன் சேர்த்து ஓய்வூதியம் வழஙக கோரி சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்கு எண்.784/2010–ன்படி மேல் முறையீடு செய்துள்ளார். மேற்படி வழக்கு திரு.கிருஷ்ணதாஸ், வழக்கறிஞர் ஏற்று நடத்திய வகையில் செலவுத் தொகை ரூ.5000/– வழஙக கேட்டுள்ளார். மேற்படி தொகை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.6347/2010/சி1)

**தீர்மானம் எண். 1543 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

குளச்சல் நகராட்சிக்கு செலு.த்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, கடை வாடகை மற்றும் இதர உரிமையாணை கட்டணங்கள் உடனடியாக செலுத்த கேட்டு இந்நகர் பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் 27.12.2010 முதல் 31.12.2010 முடிய 5 நாட்கள் மற்றும் 10.01.2011 முதல் 14.01.2011 முடிய 5 நாட்களுக்கு விளம்பரம் செய்வதற்கு (மைக்செட், டீசல், பெட்ரோல், ஆயில் உட்பட ) அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.20,000/– க்கு நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண். 4826/2007/அ1)

**தீர்மானம் எண். 1544 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 5

இந்நகராட்சி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினகரன் நாளிதழில் 29.11.2010–ம் நாள் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ. 1680/– ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6614/2010/இ1)

**தீர்மானம் எண். 1545 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 6

குளச்சல் நகராட்சி சார்பில் கன்னியாகுமரிக்கு வருகை தந்த உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் துணை முதல்வர் அவர்களை வரவேற்கின்ற விளம்பரம் 30.11.2010–ம் நாள் தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ. 7300/–ம் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். 6615/2010/இ1)

**தீர்மானம் எண். 1546 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 7

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, குத்தகை இனஙகளின் நிலுவை வரியினை செலுத்த பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் ரூ.2880/–க்கு கீழ்க்கண்ட விபரப்படி அதற்கான தொகையை வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தினத்தந்தி – ரூ. 1680/–
தினகரன் – ரூ. 1200
ரூ. 2880/–

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1547 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கான உரிமம் 31.10.2010 மற்றும் 31.12.2013 முடிய மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், தற்போதைய மாத வாடகையில் 15% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | உரிமதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 01.11.2010 மற்றும் 01.01.2011 முதல் 31.10.2013 – 31.12.2013 முடிய வாடகை. |
|---|---|---|---|---|
| 1 | 17 | திரு.செய்யது அலி | 1505 | 1731 |
| 2 | 18 | திரு.ஜெஸ்டின் செல்வகுமார் | 1575 | 1812 |
| 3 | 19 | திரு.ஜெஸ்டின் செல்வகுமார் | 1560 | 1794 |
| 4 | 17 | திரு.ஜெஸ்டின் செல்வகுமார் | 800 | 920 |
| 5 | 32 | திரு.அமலதாஸ் | 2400 | 2760 |
| 6 | 3 | திரு. வேலப்பன் | 1225 | 1409 |
| 7 | 31 | திரு. ஐசக் | 1510 | 1736 |

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1548 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

குளச்சல் நகராட்சியில் இயக்குதலும் பேணுதலும் இடை நிரப்புதல் நிதி –2010–11–ன்கீழ் பேருந்து நிலையத்தில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கட்டணம் ரூ. 2520/– ம் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.6420/2010/இ1)

**தீர்மானம் எண். 1549 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 10

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிகளுக்காக PULS FOG - 5 லிட்டர் அளவு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் ஒன்று வாஙகுவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.95,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1495 நாள் 28.10.2010–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 24.11.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | K.K.Industries, Thuckalay. | ரூ.97,250/– (மதிப்பீட்டை விட 2.37% கூடுதல்) |
| 2 | R.R. Traders, Tuticorin. | ரூ.95,000/– (மதிப்பீட்டு விகிதம் ) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் R.R.Traders,Tuticorin நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தில் (ரூ.95,000/–) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 1550 குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. R.R. Traders,Tuticorin நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙகுவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 11

இந்நகராட்சிக்குட்பட்ட குடிநீர் லாறி TN.74.Z-5304 –க்கு தகுதி சான்று பெற பழுதினை சரி செய்வதற்கு 15.12.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு :

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | மணி மோட்டார் ஒர்க்ஸ் | 1.07% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ.13,850/–) |
| 2. | K.S.S.ஆட்டோமொபைல்ஸ் | 5.00% மதிப்பீட்டை விட கூடுதல். (ரூ. 14,700/–) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.07% குறைத்து கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தீர்மானம் எண். 1522 நாள் 29.11.2010–ன்படி மன்றம் ஒப்புதல் வழஙகி உள்ளது.

(2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1551 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11–ன்கீழ் படிப்பகம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட தளத்தில் கருஙகல்லினால் ஆன பழுதடைந்த நிலையில் உள்ள சுற்றுசுவரை அகற்றுவதற்கு 10.12.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு :

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. சி. பிரின்ஸ் | மதிப்பீட்டு விகிதம்<br>( ரூ.6207.00) |
| 2. | திரு. எஸ். சத்தியதாஸ் | 10.19% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(ரூ.6840.00) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள திரு. சி. பிரின்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பபநதப்புள்ளியை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 19.11.2010–ம் தேதிய 1513–ம் எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழஙகி உள்ளது.

(3) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மக்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரர், திரு. சி. பிரின்ஸ்–க்கு 14.12.2010 அன்று பணி உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5896/2010/இ1)

**தீர்மானம் எண். 1552 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

குளச்சல் நகராட்சியில் இயக்குதலும் பேணுதலும் இடைநிரப்புதல் நிதி 2010–11–ல் மதிப்பீட்டு தொகை ரூ.29.00 இலட்சத்தில் குளச்சல் பேருந்து நிலையத்தில் சிமென்ட் தளம் அமைத்தல் பணிக்கு 15.12.2010 அன்று மின்னணு முறையில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/s.N.T.M.Construction,<br>2/9 பொதிகையடி தெற்கு தெரு<br>பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் | 5.09% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(:ரூ.3019756.00 ) |
| 2. | திரு.கே.மரிய தஙகராஜ்<br>ஆயினிவிளை, பாலப்பள்ளம் அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம். | 4.62% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(ரூ.3005924.00) |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள, அதாவது மதிப்பீட்டை விட 4.62% கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.மரியதஙகராஜ் என்பவரின் விலை விகிதத்தை குறைத்து வழஙகக் கேட்டு மேற்படி ஒப்பந்ததாரருக்கு 16.10.2010 அன்று Negotiation கடிதம் வழஙகப்பட்டது. 20.12.2010 அன்று மேற்படி ஒப்பந்ததாரர் திரு.கே.மரியதஙகராஜ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவை அரசு நிர்ணயித்த விலை விகிதத்தை விட பொதுச் சந்தையில் கூடுதலாக உள்ளதாகவும், தான் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டை விட 4.62% கூடுதலாக உள்ள விலை விகிதத்தை இதற்கு மேல் குறைக்க இயலாது எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2 –ன்படி மேற்படி ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் கூறியுள்ள கருத்தினை ஏற்று மேற்படி பணிக்கு அவர் ஏற்கெனவே கோரியுள்ள மதிப்பீட்டை விட 4.62% கூடுதலாகவுள்ள விலைவிகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வழஙகவும், இதில் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

(1) மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளதை நகர்மன்ற தீர்மானம் எண். 1574 நாள் 19.11.2010–ன்படி மன்றம் அனுமதி வழஙகியுள்ளது.

(2) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், உடனே செயல்படுத்த வேண்டியுள்ளதாலும், நகராட்சி மதிப்பீட்டில் உள்ள கட்டுமானப் பொருட்களின் விலையை விட பொதுச்சந்தையில் விலை கூடுதலாக உள்ளதாலும், பொது நலன் கருதி மேற்படி பணி உடனே செயல்படுத்த வேண்டியிருப்பதாலும், இத்திட்டம் அரசு மானியத்துடன் உள்ள சிறப்புத் திட்டம் என்பதாலும், நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2.–ன்படி மேற்படி திட்டப்பணிக்கு குறைந்த விலை விகிதத்தில் கோரியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.மரியதஙகராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டை விட 4.62% கூடுதலான விலை விகிதத்தை ஏற்று, பணி உத்தரவு வழஙகவும், இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாகும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண். 5366/2010/இ1)

**தீர்மானம் எண். 1553 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

இந்நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள கொட்டில்பாட்டில் குப்பைகள் கொட்டும் இடத்தில் நிறைந்துள்ள குப்பைகளை JCB மூலம் அகற்றி இரண்டு Tipper Tractor மூலம் கொண்டு சென்று அருகில் ஒரு இடத்தில் குழி தோண்டி மூடுவதற்கு ஒரு நாளைக்கு 10 மணி நேரம் வீதம் 3 நாட்கள் பணி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.6608/2010/எச்1)

**தீர்மானம் எண். 1554 ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு மெயின்ரோடு சாஸ்தா கோவில் அருகில் உள்ள ஓடை முதல் களிமார் பாலம் வரையும் உ.ள்ள மழைநீர் வடிகால் ஓடையில் தற்பொழுது பெய்த மழையினால் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் ஓடையில் செல்ல முடியாமல் தேங்கி அப்பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் மரமடி அருகில் ஏ.வி.எம்.கால்வாயில் சாலையின் மேல் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் செல்ல வழியில்லாமல் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று விடுகிறது. எனவே அப்பகுதிகளின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் உடனே அடைப்பை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு நாள் ஒன்றுக்கு 10 மணி நேரம் வீதம் 4 நாட்களுக்கு 1 மணி நேரத்திற்கு ரூ.1000/– வீதம் 40 மணி நேரத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.40,000/– க்கு மன்ற அ.னுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : (1) பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு தொகைக்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(2) 16.12.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.லெஸ்லின் பாபுக்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6617/2010/இ1)

**தீர்மானம் எண். 1555 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

இந்நகராட்சி ஈப்பு எண். TN.74.V.3530 நாகர்கோவில் செல்லும் போது திடீரென்று பிரேக் வேலை செய்யாத காரணத்தால் வாகனத்தை சரியாக இயக்க முடியாமல் அருகில் உள்ள ஒர்க்ஷாப்பில் சென்று பழுது பார்த்து அதற்கான பட்டியல் தொகை ரூ. 1200/– ஈப்பு ஓட்டுநர், திரு.விஜயகுமார் என்பவரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவு செய்த தொகை ரூ. 1200/– ஐ ஓட்டுநர் திரு.விஜயகுமாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1) அவசர அவசியம் கருதி மேற்படி பழுது பணியை செய்ததற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பழுது சரி செய்த வகைக்கு ஓட்டுநரால் செலவு செய்த தொகை ரூ.1200/– ஐ ஓட்டுநர் திரு.விஜயகுமார் என்பவருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5030/2007/அ2)

**தீர்மானம் எண். 1556 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

குளச்சல் நகராட்சியில் பொது நிதி 2010–11–ன்கீழ் காமராஜர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.5.25 லட்சத்திற்கு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.வி.ஆரோக்கியதாஸ், ஒப்பந்ததாரருக்கு 05.08.2010–ல் பணி உத்தரவு வழங்கி, பணி செய்ய தொடங்கி பாதியில் மேற்படி பணி நிறுத்தப்பட்டதால் பணி உத்தரவில் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட மேற்படி வேலையை 60 நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டும் என காலக்கெடு நிர்ணயித்திருந்தது. காலக்கெடு முடிவடைந்த பின்னரும் மேற்படி பணியை தொடங்காமல் இருந்ததால் மேற்படி ஒப்பந்ததாரருக்கு இந்நகராட்சி மூலம் 3 அறிவிப்புகள் வழங்கி, மேற்படி பணியை உடனே ஆரம்பிக்க அறிவுறுத்தப்பட்டது.. மேற்படி 3 அறிவிப்புகள் வழங்கிய பின்பும் வேலையை தொடங்க ஒப்பந்ததாரர் முன்வரவில்லை. ஆனால் ஒப்பந்ததாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை எனவும், அதனால் மேற்படி வேலையை தொடர்ந்து செய்ய இயலவில்லை எனவும் தெரிவித்து 10.12.2010 அன்று ஆணையாளருக்கு எழுதிய கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தினை ரத்து செய்யவும், மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காகும் செலவுத் தொகைக்கு ஒப்பந்ததாரர்

திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவரின் வைப்புத் தொகையை பறிமுதல் செய்து அதிலிருந்து ஈடு செய்யவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1557 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 18

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11–ன்கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.எண்.1565/2010/இ3 நாள் 01.06.2010–ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட KSSS காலனியில் அஙகன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.2,50,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 01.07.2010–ல் திரு.பி.ஆரோக்கியதாஸ், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழஙகி மண்வெட்டும் பணி செய்யத் தொடஙகி பாதியில் மேற்படி பணி நிறுத்தப்பட்டது. பணி உத்தரவில் வழஙகப்பட்ட காலக்கெடு முடிவடைந்தும் மேற்படி வேலை செய்ய துவஙகாததால் மூன்று முறை அறிவிப்பு ஒப்பந்ததாரருக்கு வழஙகப்பட்டது. மூன்று அறிவிப்புகளை வழஙகிய பின்பும் மேற்படி வேலையை தொடஙக ஒப்பந்ததாரர் முன்வரவில்லை. ஆனால் ஒப்பந்ததாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை எனவும், அதனால் மேற்படி வேலையை தொடர்ந்து செய்ய இயலவில்லை எனவும் தெரிவித்து 10.12.2010 அன்று ஆணையாளருக்கு எழுதிய கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தினை ரத்து செய்யவும், மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காகும் செலவுத் தொகைக்கு ஒப்பந்ததாரர் திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவரின் வைப்புத் தொகையை பறிமுதல் செய்து அதிலிருந்து ஈடு செய்யவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1558 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ந.க.எண். 1066/2010/இ1)

பொருள் எண் : 19

இந்நகராட்சியில் வசூல் செய்த பணத்தை வஙகியில் செலுத்தாமல் கையாடல் செய்த நகராட்சி பணியாளர் செல்வி. கே.சாந்தி, வருவாய் உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம் ) என்பவர் சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அப்பீல் வழக்கு எண். 887/2010–ன் மீது நகராட்சியின் சார்பாக வாதாடிய வகைக்கு திரு.கே.பி. கிருஷ்ணதாஸ், அட்வகேட், மதுரை என்பவருக்கு வழக்கு கட்டணமாக ரூ. 5000/– வழஙகக் கேட்டு வரப்பெற்ற 15.12.2010 –ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக திரு.கே.பி. கிருஷ்ணதஸ், அட்வகேட், மதுரை அவர்கள் வாதாட நகர்மன்றத் தலைவர் அவர்கள் 15.12.2010 –ம் தேதியன்று முன்அனுமதி வழஙகியுள்ளார்கள்.
2) எனவே வழக்கு கட்டணம் ரூ. 5000/– வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1559.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2010 டிசம்பர் திங்கள் 31.12.2010–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை**
திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

இவ்வலுவலக தொழில்வரி கேட்பு பதிவேட்டில் இந்நகராட்சி பகுதியில் உள்ள தொழில் செய்யாமல் உள்ள கடைகளுக்கான தொழில் வரிகள் தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படியுள்ள வரி விதிப்புகளை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

இந்நகராட்சிப் பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் அனைத்தும் இடிக்கப்பட்டு, தொழில் எதுவும் நடைபெறவில்லை என்பதாலும், இதர இனஙகளில் நீண்ட காலமாக கடைகள் எதுவும் இல்லாமல் தொழில்வரி கேட்பில் நிலுவையாக உள்ளதால் வசூல் செய்ய மார்க்கமில்லாத சூழ்நிலையில் மேற்படி தொழில் வரிக்கான வரிவிதிப்புக்களை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1560 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி TN.74.Z.8931–ன் ரேடியேட்டர் மற்றும் வைபர் மோட்டார் ஆகியவை பழுதடைந்து விட்டதால் பொது சுகாதார நலன் கருதி மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.15,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1561 .அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத் தெருவில் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக திரு.டி.மத்தியாஸ், துறைமுகத்தெரு, குளச்சல் என்பவர் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இரணியலில் நகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக்கி O.S.No.24/2009 –ன்படி வழக்கு தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கில் வாதி அழைத்தும் ஆஜராகததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என நகராட்சி வழக்கறிஞர் திரு.மரிய அற்புதம் அவர்களின் 07.12.2010–ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான நீதிமன்றத் தீர்ப்பின் நகல் வரப்பெற்றுள்ளது.

எனவே இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்தியதற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. 2500/– மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின் நகல் நீதிமன்றத்தில் இருந்து பெறுவதற்குரிய செலவு ரூ.375/– ஆக மொத்தம் ரூ. 2875/– வழஙகுமாறு நகராட்சி வழக்கறிஞரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1562 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட செந்தறவிளை சாஸ்தாஙகரையில் நகராட்சியில் இருந்து சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் திருமதி. ராமலெட்சுமி, த/பெ.மாணிக்கம் ஆசாரி, இரணியல் என்பவரின் பட்டா இடத்தினை நகராட்சியால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து அன்னாரால், மாவ.ட்ட முன்சீப் நீதிமன்றம், இரணியலில் ஆணையாளர், குளச்சல் நகராட்சி அவர்களை ஒன்றாவது பிரதிவாதியாகவும், நகர்மன்றத் தலைவர் அவர்களை இரண்டாவது பிரதிவாதியாகவும்,

சிவதாணுமாலையன், ஒப்பந்தக்காரர் என்பவரை மூன்றாவது பிரதிவாதியாகவும் வைத்து O.S.No.155/2005 –ன்படி வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தில் வாதியின் உடைமையை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ தொந்திரவு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டு வழக்கு முடிவு பெற்றுள்ளது.

எனவே இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்தியதற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. 2500/– மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின் நகல் நீதிமன்றத்தில் இருந்து பெறுவதற்குரிய செலவு ரூ.375/– ஆக மொத்தம் ரூ. 2875/– வழஙகுமாறு நகராட்சி வழக்கறிஞர் திரு.மரிய அற்புதம் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1563 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 5</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தும்பக்காட்டுவிளை பகுதியில் திரு.நடராஜன், த/பெ.சண்முகம் நாடார் என்பவருக்கு சொந்தமான பட்டா இடத்தில் நகராட்சியில் இருந்து பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்து அன்னாரால், மாவ.ட்ட முன்சீப் நீதிமன்றம், இரணியலில் ஆணையாளர், குளச்சல் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக்கி O.S.No.79/2009 –ன்படி வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தில் பிரதிவாதியோ அவரது ஆட்களோ வாதியின் சொத்தில் பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என நிலைக்கால உறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்பட்டு வழக்கு முடிவு பெற்றுள்ளது.

எனவே இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்தியதற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. 2500/– மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின் நகல் நீதிமன்றத்தில் இருந்து பெறுவதற்குரிய செலவு ரூ. 375/– ஆக மொத்தம் ரூ. 2875/– வழஙகுமாறு நகராட்சி வழக்கறிஞர் திரு.மரிய அற்புதம் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1564 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தெற்கு கள்ளியடைப்பு பகுதியில் திரு.முஜீப் ரஹ்மான் என்பவருக்கு சொந்தமான பட்டா இடத்தினை நகராட்சி ஊழியர்கன் ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டதாக அன்னாரால், மாவ.ட்ட முன்சீப் நீதிமன்றம், இரணியலில் ஆணையாளர், குளச்சல் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக்கி O.S.No.12/2009 –ன்படி வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கில் வாதி ஆஜராகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு முடிவு பெற்றுள்ளது.

எனவே இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்தியதற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. 2500/– மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின் நகல் நீதிமன்றத்தில் இருந்து பெறுவதற்குரிய செலவு ரூ. 375/– ஆக மொத்தம் ரூ. 2875/– வழஙகுமாறு நகராட்சி வழக்கறிஞர் திரு.மரிய அற்புதம் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1565.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 டிசம்பர் திங்கள் 31.12.2010–ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரஙகில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை**

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

2010–11–ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, கடை வாடகை மற்றும் இதர உரிமக் கட்டணஙகளை உடனடியாக செலுத்த கேட்டு இந்நகராட்சி பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் 27.12.2010 முதல் 31.12.2010 முடிய மற்றும் 10.01.2011 முதல் 14.01.2011 முடிய 10 தினஙகளுக்கு விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 20,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1544 நாள் 23.12.2010 மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைலரின் முன்அனுமதி பெற்று 23.12.2010 அன்று உள்ளூர் சவுண்ட்ஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| வ எண். | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் | விலைப்புள்ளி விகிதம்<br>நாள் ஒன்றுக்கு<br>மைக் செட், டீசல், ஆட்டோ<br>பெட்ரோல், ஆயில் உட்பட ) |
|---|---|---|
| 1. | பிரவீன் சவுண்ட்ஸ்,<br>குளச்சல். | ரூ. 2250/– |
| 2. | லீலா சவுண்ட்ஸ்,<br>குளச்சல் | ரூ. 1950/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் லீலா சவுண்ட்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙகப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : 1) லீலா சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ரூ. 1950/–க்கான குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

2) அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணி உத்தரவு வழஙகியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1566.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 2

2010–11 பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் – பயிற்சி பிரிவின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1,94,738/– க்கு செலவினஙகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1459 நாள் 20.08.2010–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.3284/2010/சி1 நாள் 12.10.2010–ன்படியும், நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்ட 23 நபர்களுக்கு கணனி மற்றும் செல்போன் பயிற்சிகள் வழஙகப்பட்டு வருவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பயிற்சி வகுப்புகள் வழஙகி வருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1567 உறுப்பினர் திரு.நூர்முகம்மது அவர்கள் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தார். அவையில் ஆஜராகியிருந்த ஏனைய 12 உறுப்பினர்களால் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 3</u>

இந்நகராட்சியில் மின்ஆளுமை திட்டத்தின்கீழ் இயஙகிவரும் கணினிகளில் பல பழைய கணினிகள் அடிக்கடி பழுதாகி விடுவதால் அவசியம் கருதியும் மின் ஆளுமை திட்டத்தில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும் கீழ்கண்ட கணினி பொருட்கள் DGS&D விலையில் வாங்க மேற்படி தொகை ரூ.1,98,000/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பொருள் மற்றும் மாடல் | எண்ணம் | விலை ரூ. |
|---|---|---|---|
| 1. | டெக்ஸ்டாப் கணினி<br>Core 2 Duo | 2 | 70000 |
| 2. | லேப்டாப் கணினி<br>Core i-3, 330M | 2 | 78000 |
| 3. | மானிட்டர்<br>TFT 18.5 inch | 4 | 26000 |
| 4. | பிரிண்டர்<br>HP LJ P2055DN | 1 | 24000 |
| | **மொத்தம்** | | **198000** |

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1568.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 4</u>

வடகிழக்கு பருவமழை 2010—11—ல் குளச்சல் நகராட்சியில் தற்காலிகமாக சீரமைக்கப்பட வேண்டிய பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் .எண்.Rc/G4/29704/2010 நாள் 16.12.2010—ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளி ரோட்டில் பழுதான தார் சாலையில் பழுதுகளை சரி செய்வதற்கு ரூ.4,25,000/—க்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு 14.12.2010 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் கூறியதின்படி பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 23.12.2010 அன்று கோரப்பட்டதின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை பின்வருமாறு :

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.T. ராதாகிருஷ்ணன் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>( ரூ.401335.00 ) |
| 2. | திரு. பி.தஙகமணி | 5.28% மதிப்பீட்டை விட கூடுதல்.<br>(ரூ. 422750.00 ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T. ராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : (1) மேற்படி பணிக்கு 14.12.2010 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் கூறியதின்படி பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

(2) மேற்படி பணிக்கு 23.12.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திரு.T. ராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று திரு.T. ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரருக்கு 23.12.2010 அன்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 1569.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 5</u>

இந்நகராட்சிக்குட்பட்ட இந்திராகாலனி, நகராட்சி குப்பை கொட்டும் இடத்தில் இறைச்சி வியாபாரிகள் சிலர் இறைச்சி கழிவுகளை கொண்டு சென்று அங்கு கொட்டுவதால் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அந்தப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும் மேற்படி நிகழ்வை உடனே தடுத்து நிறுத்துமாறு கொடுத்த வேண்டுகோளினை ஏற்று நகர்மன்ற தலைவருடன் ஆணையாளர், பொறியாளர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோர் மேற்படி இடத்தினை பார்வையிட்டு, மேற்படி குப்பை கொட்டும் இடத்திற்கு வெளியே மெயின்ரோட்டின் அருகே இரண்டு பில்லர் அமைத்து இரும்பு கேட் அமைக்கவும், மேலும் அறிவிப்பு பலகை ஒன்று வைக்கவும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.75,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1570 .உறுப்பினர் திரு.M.A.கலில் ரகுமான் அவர்கள் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தார். அவையில் ஆஜராகியிருந்த எஞ்சிய 12 உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் ஓடை அமைக்க ரூ. 5.25 லட்சத்திற்கு பொது நிதியின்கீழ் 2010–11–ம் ஆண்டில் பணி மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.1339 நாள் 28.05.2010–ன்படி ஒப்புதல் வழஙகி திரு.பி. ஆரோக்கியதாஸ், ஒப்பந்தக்காரருக்கு நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று 05.08.2010 அன்று பணி உத்தரவு வழஙகப்பட்டது. அதன்படி ரூ.1,71,771/–க்கு பணி செய்துள்ளார். மேலும் பணி தொடர்ந்து செயல்படுத்தாத காரணத்தால் 23.12.2010–ம் நாளைய நகர்மன்ற தீர்மானம் எண்.1557–ன்படி ஒப்பந்தக்காரர் திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவரின் மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தினை ரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நகர்மன்றம் ஏற்கனவே ஒப்புதல் வழஙகி உள்ளது. எனவே மேற்படி பணிக்கு நகர்மன்ற உறுப்பினர் மேலும் சிறிது தூரம் கழிவுநீர் ஓடையை நீட்டித்துத் தரும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் நகர்மன்றத் தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோருடன் இடம் பார்வையிடப்பட்டது. அதன்படி காமராஜர் சாலையில் மேலும் சிறிது தூரத்திற்கு கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேஙகி நிற்கிறது. அதனால் துர்நாற்றம் வீசி பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி தேஙகி நிற்கும் கழிவுநீரை அருகில் இருக்கும் வண்ணாத்திவிளை கழிவுநீர் ஓடையுடன் இணைத்தால் தான் காமராஜர் சாலையில் உள்ள கழிவுநீரை தேஙகாமல் கொண்டு போக முடியும். எனவே கழிவு நீரோடையின் நீளத்தை அதிகரித்து காமராஜர் சாலைக்கு கழிவுநீர் வடிகால் ஓடை அமைக்க ரூ. 5,50,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே உள்ள மதிப்பீடு ரூ.5,25,000/–ம் வேலை செய்து முடித்த தொகை போக மீதம் உள்ள தொகை ரூ.3,53,229/– உடன் மேலும் ரூ. 1,96,771/– ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளளவும், மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1571.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 7</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காரிதாஸ் காலனி தெருவில் கதவு எண்.4/699–க்கு உரிய உரிமையாளர் திருமதி. சேசம்மாள் மரிய ஜார்ஜ் என்பவர் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரி பதிவுக் கட்டணம் ரூ. 25/– ம், முன்வைப்புத் தொகை ரூ.2000/– ம் 04.02.2009 அன்று செலுத்தியுள்ளார். தற்போது மேற்கண்ட முகவரியிலுள்ள மனுதாரர் குடிநீர் இணைப்பு பெறுவதற்கு முன்பே தான் செலுத்திய வைப்புத் தொகை ரூ. 2000/– ஐ திரும்ப வழஙகுமாறு கோரியுள்ளார். எனவே வைப்புத் தொகை ரூ. 2000/– ஐ திரும்ப வழஙக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1572.அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

குளச்சல் நகரரட்சிக்கு சொந்தமான மினி லாரி TN.74-T-5508–ன் தகுதிச் சான்று 03.01.2011–ல் முடிவடைவதால் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக மினி லாரியின் கீழ்கண்ட பழுதுகளை சரிச் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 22,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(1) முழு பெயிண்டிங
(2) டிஙகர் ஒர்க்ஸ்'
(3) கிளட்ச் மற்றும் பிரேக் சரி செய்தல்
(4) முன் இருபக்கம் உள்ள என்ட் மாற்றுதல்
(5) ஒட்டுநர் இருக்கை சரி செய்தல்
(6) முழு சர்வீஸ் மற்றும் கிரிஸ் வைத்தல்
(7) வீல் அலைன்மென்ட், வீல் பேலன்சிங பார்த்தல்
(8) ஸ்பிரிங வாப்ளிங சரி செய்தல்
(9) பட்டை தட்டி போடுதல்
(10) இரு பக்கம் உள்ள டோர் சரி செய்தல்
(11) கியர்பாக்ஸ் மற்றும் கிரவுன் ஆயில் செக்கப்
(12) இரு புதிய ஹாரன் பொருத்துதல்.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1573 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

இந்நகராட்சி ஈப்பு எண்.TN.74-V.3530 - 27.12.2010 அன்று நெல்லை மாநகராட்சி அலுவவகத்தில் ADMA அவர்கள் தலைமையில் நடைபெறவிருந்த ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஆணையாளர், மேலாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோர்கள் சென்று கொண்டிருக்கும் போது நெல்லையை அடுத்த பானான்குளம் என்னுமிடத்தில் இஞ்சின் பழுதாகி ஈப்பு இயஙகாமல் நின்று விட்டது. மேலும் ஈப்பை இயக்க முடியவில்லை. எனவே ஈப்பின் கீழ்க்கண்ட பழுதுகளை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ. 1,23,350/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(1) 4 Wheel Gr..Packing with labour
(2) Rear spring Rth - Remaking works
(3) Front suspension over hauling
(4) Wheel Alignment check up
(5) Engine overhauling work including the servicing of radiator
(FTP, Nottle, alternator, Self starter etc.,)
(Cyl-Head assembly changing)
(6) Rr.R.H.Door – Regulator change
(7) Necessary Lath work charges

**அ.குறிப்பு :**

சிறப்பு சாலைத் திட்டம், வெள்ள நிவாரணப் பணி, வரிவசூல் மற்றும் அத்தியாவசிய பணிகளுக்கும் ஈப்பினை பயன்படுத்த வேண்டியுள்ளதால் உடனடியாக ஈப்பை சரி செய்ய வேண்டி உள்ளது. எனவே ஈப்பின் அவசர அவசியம் கருதி மேற்படி குறிப்பிட்டுள்ள பழுது பணிகளை சரி செய்ய மன்றம் அ.னுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1574 .அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 10

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளி ரோட்டிலிருந்து செக்காலத்தெருவிற்கு செல்லும் சாலையில் ஹோட்டல் நியூ முதல் வீட்டு எண். 27/3 வரை கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியே செல்ல முடியாமல் சாலையின் மேல் நிரம்பி பள்ளம் விழுந்து சாலை குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கும், மக்கள் நடந்து செல்வதற்கும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளருடன் இடம் பார்வையிட்டு, மேற்படி இடத்தில் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1575 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி